உ

கடவுள் துணை.

# நீதிசாரமூலமும்-உரையும்

இவை,

திருவையாறு

**பஞ்சநதஐயரால்**

பரிசோதித்து,

மதுரை புதுமண்டபத்தில் புஸ்தகவியாபாரம்

சண்முகம்பிள்ளை அவர்களால்

திரிசிரபுரம்

**தி-சபாபதிபிள்ளையினது**

மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுக௵-புரட்டாசிமீ

1873

சென்னை-சிந்தாத்திரிபேட்டை-சாமிநாயக்கர்வீதி-நெ-௪௩.

கடவுள் துணை

# விளம்பரம்.

இதனால்சகலமானவர்களுக்கும் அறிவிப்பதுயாதெனில் திருச்சிருப்பள்ளி தேரடிக்கடைவீதியில் புஸ்தகவியாபாரம் தி-சபாபதிபிள்ளைகடையிலும் மதுரைபுதுமண்டபத்தில் புஸ்தகவியாபாரம் சண்முகப்பிள்ளை புஸ்தகக்கடையிலும் தஞ்சாவூர் திருவேங்கடப்பிள்ளை புஸ்தகக்கடையிலும் தமிழ்-தெலுங்கு-இங்கிலீஷ்-புஸ்தகங்களும் அகஸ்தியர்முதலான பெரியோர்கள் அருளிய,வாகடசாஸ்திரங்களும் விற்பனை செய்துவருகிற படியால் தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம் ஷை புஸ்தகங்களும் விலைசரசமாய்க் கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| அயிலாண்டீஸ்வரிபதிகம் | * |
| ஷை மெய்வருக்கப்பதிகம் | * |
| ஷை ஆசிரியவிருத்தம் | * |
| வேலாயுதக்கண்ணி | * |
| வேலவர்கண்ணி | * |
| முருகையன்மாலை | * |
| முருகர்தாலாட்டு | * |
| திருவேங்கடமாலைபதவுரை | * |
| சாமுத்திரிகாலட்சணம் | * |
| அகஸ்தியர்சிவகுழிகை | ௮ |
| ஷை வயித்தியகும்மி | ௱௭ |
| ஷை சுத்தஞானம் | ௰ |
| கொங்கணர் கருக்குளிகை | ௮ |
| மச்சமுனிகியாழம் | ௮ |
| திருமூலர்கிரந்திக்கி எண்ணெய் | ௮ |
| நந்தீசர்விஷக்குளிகை | ௮ |
| வால்மீகர்சிவயோகம் | ௬ |
| சுந்தரானந்தகேசரி | ௫௰ |
| செயமுனிசூத்திரம் | ௱௯ |
| ஆருடசாத்திரம் | ௰௨ |
| கைவுளிநூல்சகக்ரத்துடன் | * |

உ

கடவுள் துணை.

# நீதிசாரமூலமும்-உரையும்.

காப்பு.

நேரிசைவெண்பா.

பருதிமதியுலவு பார்மிசையோர்க்கெல்லாந்
தருமநெறிநீதிதனைச் சாற்றக் கருதியிடு
துங்கவெழுத்தைந்துபொருள் சுந்தரற்பொற்செஞ்சடையிற்
கங்கைசுதன்றந்திமுகன் காப்பு.

கடவுள்வாழ்த்து.

அனைத்துலகெங்குந்தானு யமரர்கோன்றேவனாகி
நினைத்தவருளத்தினித்த நேசமாய்நெடுமால்பாத
மனத்தினிலிருத்திமுன்ன மறைவல்லோருரைத்தநீதி
யினத்தினைத்திரட்டியுள்ள சாரநானியம்பலுற்றேன்.

(இதன்பொருள்.) சர்வலோகேஸ்வரனுமாய் சர்வாந்திரியாமியாய் தேவர்களுக்கெல்லாந் தேவனுமாயிருந்துள்ள ஸ்ரீபுருஷோத்தமனை நமஸ்கரித்துநீதிசாரத்தினுடையதிரட்சிதனைச்சொல்லுகிறேன். எ-று()

பாவபுண்ணியம்.

நன்றுடன்றீதானாலு மவரவர்நயந்துதன்னாற்
பண்ணியபாவநன்மை பலித்தவரனுபவிப்பார்
சென்றிடுநூறுகற்பஞ் செல்லினுந்தவிர்ந்திடாது
அன்றுசெய்யனுபவங்க ளனுபவித்திடவும்வேண்டும்.

(இ-ள்.) நன்றேயாகிலுந் தீதேயாகிலும் தன்னாற் பண்ணப்பட்ட பாவபுண்ணியமிரண்டுந் தானே யனுபவிக்கவேண்டும் ஆதலால் நூறுகோடி காலஞ்சென்றாலு மனுபோகமானதுஒருக்காலுந்தவறாது. எ-று

இதுவுமது.

சீர்பெறுதன்மச்செய்கை தெரிந்ததின்வழியேசென்று
பார்பெறபுத்திபண்ணித் தனக்குதுபலித்திடாது
ஏர்பெருகருமமெல்லாம் யாவர்க்குமாகாதென்று
தேர்வுறவிடுத்தறத்தை யொல்லையிற்செய்வர்தாமே.

(இ-ள்.) தன்மமான வகையெல்லாங்கேட்கக் கடவனுமாய் மேன்ல

பொருளை யுத்திபண்ணவல்லவனுமாய் தனக்காகாதகாரியம் யாருக்குமாகாதென்றுவிடுத்து கடுகத்தன்மங்களைப் பண்ணுவாம்.எ-று. (௩)

### இதுவுமது.

சீருடன்வருந்தித்தேடுந் திரவியம்பதியுஞ்செல்லாத்
தூருடன்பிறவுங்காடு மட்டினிலுடன்போய்மீள்வார்
பாரினில்வாழுநாளில் பண்ணியபாவநன்மை
கூருடன்போந்தராம கணையெனக்கூடப்போமே.

(இ-ள்.) தான்தேடியதனமும் வருந்தியெடுத்த கிரகமுங்கூடப்போகாது.மித்துருவும் பாந்தவத்தாரும் மயானத்தளவுங் கூடப்போய்மீள்வார்கள் அப்பால்தான்தேடிய பாவபுண்ணியமிரண்டும் ராமபாணம்போல் கூடப்போம்.எ-று. (௪)

### இரட்சித்தல்.

அந்தணருட்னவுக்கு ஆபத்துவருங்காலத்தில்
தந்தநல்லுயிரைவிட்டுத் தானதைரட்சித்தானல்
இந்தநற்சனனம்போயீ ரைம்பதுபிரமயோனி
வந்தயிஸ்வரியவானாய் வாழ்ந்துபின்றேவனாவான்.

(இ-ள்.) பிராமணருக்காவது பசுக்களுக்காவது ஆபத்துவருங்காலத்தில் தன்னுயிரைவிட்டாகிலும் அதைரட்சித்தானாகிலவன் நூறுசன்மம் பிராமணயோனியிலே பிறந்து ஐசுவரியவனாக வாழ்ந்து பிறகுதேவதத்துவத்தை யடையவான்.எ-று. (௫)

### அன்னதானம்.

கரிபரியாயிரங்கள் கனத்தகோதானம்பூமி
பரிவொடுரசிதஞ்சொர்ன பாத்திரம்பணபாமென்று
மிருகுலமொத்தகன்னி கோடிதானீந்திட்டாலும்
அரிதிதுவென்றேயன்ன தானமேயதிகமாகும்.

(இ-ள்.) ஆயிரம்யானையும் ஆயிரங்குதிரையும்வெள்ளிப்பாத்திரஞ்சொர்னபாத்திரம் நல்லஉபயகுல விச்சித்திரமான கன்னியாஸ்திரிகளிலே கோடி கன்னிகாதானஞ் செய்திட்டாலும் அன்னதானத்துக்குச் சரியல்ல.எ-று. (௬)

### தன்மஞ்செயல்.

செல்வமுஞ்சட்டமுந்தானுஞ் சதமன்றுமறலியென்றும்
அல்லலேசெய்வானென்று மறிந்தவரறிகையாலே
சொல்லலாஞ்சொல்கையாலே தொடங்கியமறலிதன்னை
வெல்லவேயறங்கள்செய்து விடுவர்களறிவுள்ளோரே.

(இ-ள்.) சரீரமும் ஐசுவரியமுமநிலையல்லமிருத்துவானவன்தன்னைக்

கொல்லக் காத்திருப்பதால் அவனைவெல்லத்தகத்தாக கடுகத்தன்மங்க ளைப்பண்ணுவாம்.எ-று. (எ)

இதுவுமது.

சுயமாய்ச்செய்தருமந்தன்னிற் றேன்றிடுமிருமடங்கு.
அயலார்செய்தருமங்காத்த லன்றியேயவ்வறத்தை
நயமாய்ச்சென்றபகரித்து நத்தியேதானுமொன்றை
வியனாய்ச்செய்தருமமெல்லா நிட்பலமாகுங்காலே.

(இ ள்) தானுதனமாய்ச்செய்கிற தன்மத்திலும் பிறத்தியார்செய்கிற தன்மத்தைப் பரிபாலனம்பண்ணினுனாகி லிருமடங்குபலனதிகமுண் டுஅந்தத்தன்மத்தைப் பரிகரித்து வேறே தானொரு தன்மஞ்செய்தா னாகில் நிட்பலனுகுமென்றவாறு. (அ)

நற்குலம்விளங்க.

கங்குலில்மதிவிளங்கும் கதித்திடும்பகற்காலத்திற்
செங்கதிர்விளங்குமன்றி சிறந்திடுமுலகமூன்றும்
பொங்கியதன்மத்தாலே போனதுவிளங்குமென்று
வங்கிஷம்விளங்குநல்ல மகவினாற்றானுமென்றே.

(இ-ள்.) இராத்திரிகாலமானது சந்திரனாலேவிளங்கும்பகற்காலமா னது சூரியனாலேவிளங்கும் தன்மத்தினாலே மூன்றுலோகமும் விளங் கும் வங்கிஷமானது நல்லசற்புத்திரனாலே விளங்கும்.எ-று. (கூ)

நல்விருட்சம்வைத்தல்.

ஓரரசாலும்வேம்பு மொருபத்துப்புளியுமூன்றுஞ்
சீர்பெறுவிளாவும்வில்வ மூன்றுடன்சிறந்தநெல்லி
பேர்பெறுமைந்துதெங்கும் பெருகுமாவைந்தும்பேணி
யார்பயிராக்கிச்செய்தா லவர்க்கில்லைநரகந்தானே.

(இ-ள்.) ஒரு அரசும் ஒருஆலும் ஒருவேம்பும் பத்துப்புளியும்மூன் றுவிளாவும் மூன்றுவில்வமும் மூன்றுநெல்லியும் ஐந்துதென்னமரமும் ஐந்துமாமரமும் எவனாகிலும்வைத்துப் பயிர்செய்தானாகில் அவனுக் கொருக்காலும் நரகமில்லை.எ-று. (கூ)

நூற்றைவிட்குணவான்மேலெனல்.

குலத்தையுத்தரிக்கநல்ல குணமகவொன்றேபோதும்
நலத்தையிங்கிதத்தைச்சற்றும் நன்றிடாச்சேய்களானூறு
பெலத்துடனிருக்கிலென்னும் பெருகிடுமநேகமான
தலத்திடையிருக்கிலென்னும் விளங்குதல்மதிதானென்றே.

(இ-ள்.) குலத்துக்கெல்லாம் நல்லகுணமான சற்புத்திரனொருவன் போதும் குணமில்லாதபிள்ளைகளிலே நூறுபேரிருந்தாலும் பிரயோச னமில்லை அதென்போலவென்னில்ஆகாசத்திலேஅநேகநட்சத்திரமிரு

ந்தாலுஞ் சந்திரனொருவ னில்லாவிட்டால் விளங்கப்படாதாம். எ-று.

## தன்தன்கீர்த்திவிளங்கல்.

மதகரிமதத்தினாலும் வாசிவேகத்தினாலும்
பதிமனைவதுவையான பாவைதன்குணத்தினாலும்
அதிகராத்திங்களாலு மரசன்றன்னீதியாலும்
விதரணன்கீர்த்தியாலும் விளங்குவரிவர்கடாமே.

(இ-ள்.) ஆனையானது தன்மதத்தினாலே விளங்கும் குதிரையானது தன்வேகத்தினாலே விளங்கும் நாயகியானவள் தன்குணத்தினாலே விளங்குவள் ராத்திரியானது சந்திரனாலே விளங்கும் அரசனானவன் தன்னீதியினாலே விளங்குவன் தாதாவானவன் தன்கீர்த்தியினாலே விளங்குவான். எ-று. (௰௨)

## பொருளினால் துக்கமடைதல்.

தனத்தினைத்தேடத்துக்கந் தானதைச்செம்மைபண்ணி
மனத்துடன்காக்கத்துக்கம் வழங்கியபோதுந்துக்க
மினத்துடன்பொசிக்கத்துக்க மெண்ணியபொருளினாலே
அனைத்தினுந்துக்கந்தானே யிருப்பிடமாகுங்காலே.

(இ-ள்.) தனத்தைத்தேடுகையிலுந்துக்கம் அதனைப்பதனம்பண்ணுகையிலுந் துக்கம் அதுநசித்துப்போகையிலுந் துக்கம் அதைச்செலவழிக்கையிலும் துக்கம் ஆதலால் துக்கத்துக்கிருப்பிடம். எ-று. (௰௩)

## தீயவைவிலக்கல்.

சீலித்துத்தன்மபாவச் செய்கையுமறிந்துகொண்டு
ஆலிக்கும்பெரியோராகா தொழிலுக்கங்கமரான்போல்
கூலிக்குக்கழுவிலேறிக் கொள்வரோவென்றுமந்தச்
சோலிக்குங்கைவையார்க ளறிவினாற்றுலங்குவோரே.

(இ-ள்.) புண்ணிய பாவங்களையறிந்த பெரியோர்கள் ஆகாததொழில்கள்வந்தால் அதை யேற்றுக்கொள்ளார்கள் அதென்போலவென்னில கூலிக்குக் கழுவிலேயிருக்கிற பேர்களுண்டோவென்று அந்தத் தொழிலுக்கிசையார்கள். எ-று. (௰௪)

## தூர்ச்சனர்செய்கை.

துற்சனன்றனக்குத்தானுந் துரைத்தனங்கொடுத்தாலென்றன்
சற்பனைத்துரோகங்கேடு தானினைத்திடுவரன்போல்
மற்கடங்கானுமாகி வாலிலேதேளுங்கொட்டி
உற்றிடுங்கொள்ளியீந்தா லூரெல்லாஞ்சுடும்போலென்றே.

(இ-ள்.) துர்ச்சனனானவனுக்கு துரைத்தனம்வந்தால்பழிபாவங்களுக்கஞ்சாமல் கேடுகளைநினைப்பன் அதென்போலவென்னில்குரங்கின்வாலிலே தேளுங்கொட்டிக் கையிலேகொள்ளிக்கட்டையுமகப்பட்டாலு

ரெல்லாஞ்சுடும்போல்.எ-று. (௰௫)

திருத்தினால் வியாகுலத்தை வெல்லுதலெனல்.

வைத்திடுந்தனத்தாற்சேதம் வளர்ந்திடுமுயிர்க்குச்சேத
முற்றிடும்வியாகுலங்கள் யாவர்க்குமுளதேயென்று
புத்திமான்றனக்குத்தானே மனதிலேதேறிக்கொண்டு
சுத்தனுய்நகைத்தானாகிற் றுயரதுதோற்குமென்றே,

(இ-ள்.) யாவனொருவனுக்கு உயிர்ச்சேதம் பொருட்சேதம்வந்தால் புத்திமானாயிருக்கிறவன் மனதிலே தேறிக்கொண்டு நகைத்தானாகில் அந்தவியாகுலமானது தோற்றுப்போம்.எ-று. (௰௬)

ஒன்றினால் லொன்றுசம்பவித்தல்.

நிதிதெரிசித்தால்போகம் நேரிடுமலர்கட்டானும்
மதிதெரிசித்தால்வாச மணுகிடுமென்றிநல்லோர்
பதிதெரிசித்தால்முத்தி பலன்றருந்திக்குணத்தால்
சதிசெய்துர்ச்சனரைக்கண்டாற் பாவங்கள்சம்பவிக்கும்.

(இ-ள்.) அர்த்தத்தை தெரிசித்தா லப்போகஞ்சம்பவிக்கும் புட்பத்தைத் தெரிசித்தால் வாசனைசம்பவிக்கும் பெரியோர்களைத் தெரிசித்தால் மோட்சஞ்சம்பவிக்கும் துர்ச்சனரைக்கண்டால்பாவஞ்சம்பவிக்கும்.எ-று. (௰௭)

துர்ச்சனற் குதவிவிலக்கல்.

இடங்கருக்கிடுக்கண்வந்தா லகற்றுதலென்போலென்னில்
விடங்கொள்தேள்நெருப்பில்வீழ்ந்தா லெடுத்துவிட்டவனை
க்கொட்டு,மட்டங்கிடாத்துர்ச்சனர்க்கு மருள்செய்யிலென்போ
ற்றங்கள்,திடங்களாலபசாரங்கள் செய்குவர்திண்ணந்தானே.

(இ-ள்.) துர்ச்சனனானவனுக்குஒருஆபத்துவந்தபோது அந்தஆபத்தைப் பரிகரிக்கில் அவகடஞ்செய்வான் அதென்போலவென்னில்தேளானது நெருப்பிலேவிழுந்தா லெடுத்து விட்டவனை யுடனே கொட்டும் அதுபோல.எ-று. (௰அ)

துர்ச்சனர் கவிகளை யிகழ்தல்.

துற்சனன்முன்னேநல்ல துலங்கியமதுரமான
விற்பனக்கவிதைதன்னை விளம்பிடிலவர்கட்ங்க
அற்பமாங்குணத்தினாலே யவகடஞ்செய்வரென்போல்
மற்கடந்தன்கைமாலை தான்படுவாறுமென்றே.

(இ-ள்.) துற்சனன் முன்னே நல்லமதுரமான கவிதைகளைச்சொன்னால் உடனேயவகடஞ்செய்வன்அதென்போலவெனில் குரங்கின்கையிலேகொடுத்த பூமாலையோடொக்கும்.எ-று. (௰௯)

### துர்ச்சனன் புலவனுயிருந்தும் விலக்குவரெனல்.

செகந்தனிற்புலவராகிச் சேர்ந்ததுர்ச்சனர்களானே
அகந்தனிலிருக்குமாகி லவனைக்கைவிடுவரென்போல்
இகந்தன்மணியினாலே யிலங்கியபாம்பைக்கண்டால்
சுகந்தனைவிடுத்தருண்டு தூரத்தேசெல்வர்போலாம்.

(இ-ள்.) துர்ச்சனனானவனுக்கு ஒருஆபத்துவந்தபோதுஅந்தஆபத்தை வித்துவானாக யிருந்துந் துர்ச்சனனாயிருந்தா லவனைக்கைவிடுவார்கள் அதெதென்போலவெனில்பாம்பானதுநல்லவிரத்தினங்களினாலேபூசிதமாயிருந்தாலும் சர்ப்பத்தைக்கண்டால் பயந்து தூரவிலகிப் போவார்கள்.எ-று. (உ௰)

### வித்துவத்தன்மையறிதல்.

விஞ்ஞையரருமைதன்னை விஞ்ஞையரறியவேணும்
புன்செயலறிவிலீனர் புகழ்ந்ததையறியாரென்போல்
விஞ்சியமகப்பேறான வேதனைமலடிதானும்
கிஞ்சிதமறியாரென்போ லிருந்திடுங்கேழ்விதானே.

(இ-ள்.) வித்துவானருமையை வித்துவானறியவேணும்அல்லாதார்க்கறியப்போகாது அதெதென்போலவெனில் மலடியானவள் பிறர்சூதவேதனை யறியாததைப்போல்.எ-று. (உக)

### ஆபத்துக்குதவாதெனில்.

புத்தகந்தன்னில்வித்தை போதவேயெழுதிவைத்து
மத்தமேபக்குவத்துக் காமெனவயலார்கையில்
சித்தமாய்க்கொடுத்தபொன்னுந் தேசசஞ்சாரசேயு
முத்தயிக்கருமமூன்று முண்டென்பதுதவாதன்றே.

(இ-ள்,) தான் பாடம்பண்ணாமல் புத்தகத்திலேயெழுதிக்கட்டிவைத்திருக்கின்ற வித்தையும் ஆபத்துக்காலங்களி லுதவுமென்று பிறத்தியார்கையிலே கொடுத்துவைத்த திரவியமும் தேசசஞ்சாரமாய்த்திரிகின்ற பிள்ளையு மிந்தமூன்றுகாரியங்களு முண்டென்கிறதே யல்லாமல் ஆபத்துக்குதவாது.எ-று. (உஉ)

### பாம்புக்குப் பால்வார்த்தால் விஷங்கொடுக்குமெனல்.

பாத்திராபாத்திரங்கள் பார்க்குநாள்பசுவுக்கெந்த
மாத்திரந்திரணமீய்ந்தாற் பால்தருமந்தப்பாலை
வார்த்திடிற்பாம்பினுக்கு விஷம்தேவளருமன்னே
யேத்தபாத்திரமறிந்து யீந்திடக்கடவதென்றே.

(இ-ள்.) சற்பாத்திரமென்றும் அசற்பாத்திரமென்றுமிரண்டுவிதமுண்டு அதெதென்போலவெனில் பசுவானதுக்குத்திரணங்கொடுத்தால் பாலைக்கொடுக்கும் அதைப்பாம்புக்குவார்த்தால் விஷத்தைக்கொடுக்குமாப்போல்.எ-று. (உங)

## பாத்திரமூன்றென்றறிதல்.

தானமாம்பாத்திரத்தில் விதமதுதான்மூன்றாகும்
ஆனவுத்தமமத்திமத்தோ டதன்மமுமூன்றதாகும்
வானநீர்காய்ந்தயத்தில் வற்றிடும்வனசமீதிற்
போனநீருள்ளமட்டும் பொருந்துசிப்பியில்முத்தாமே.

(இ-ள்.) தானம்பண்ணுமிடத்தில் உத்தமபாத்திரம் மத்திமபாத்திரம் அதன்பாத்திரமென்று மூன்றுவிதமுண்டு அதென்போலவெனில் ஆகாசத்திலிருந்து வருஷிக்கிற மழையானது காய்ந்தவிரும்பிலே விழுந்தா லொன்றுமில்லாமற் சுவறிப்போகுந் தாமரையிலே விழுந்தால் விழுந்தபடியிருக்கும் முத்துச்சிப்பியிலேவிழுந்தால் விலைமதிக்கப்படாத முத்தையீனுமாப்போல.எ-று. (உச)

## அதன்மதானம் செய்தல்.

நிறைபெறுசமுத்திரத்திற் பெய்தநீர்மழையுநெய்பால்
குறையறவுண்டோர்க்கன்னங் கொடுத்தலுங்குபேரனை
பிரபலருக்கீய்ந்தசொர்ன தானமும்பிறிதுயென்று
விறலபெறுதானமூன்றும் விறுதாவெனவறியம்பலாமே.

(இ-ள்.) சமுத்திரத்திலே பெய்தமழையும் நெய் பால் அறுசுவையுடன் தனதிஷ்டப்படி சாப்பிடுகிறவனுக்குக்கொடுக்கிற அன்னதானமுந் திரவியசம்பன்னன் கையிலேகொடுக்கிற சொர்னதானமு மிந்தமூன்றுதானமும் விறுதா.எ-று. (உரு)

## இதற்கிறுதுணையெனல்.

அகத்துணமனைவியாக்கை துணையதாந்துணையதாகுஞ்
செகத்தினிற்செல்லுந்தேசாந் திரிக்குநற்சேர்ந்தவித்தை
சுகத்தொடுபரலோகத்தில் துளங்கியவருளோடென்று
மிகத்தினிற்செய்ததன்மந் துணையதாமியற்றுங்காலே.

(இ-ள்.) அகத்துக்குத்துணை மனைவி சரீரத்துக்குத்துணை சகோதரன் தேசசஞ்சாரத்துக்குத்துணை தான்கற்றவித்தை பரலோகத்துக்குத் துணை தான்பண்ணியபுண்ணியபாவம்.எ-று. (உசு)

## தன்சீவனைவிட்டாலொழியகொடாதவர்களெனல்.

புலியுயிர்போகமட்டும் யொருந்தியதவளையியா
வலியுறுவீரன்தானு மறிப்பன்றிப்புறம்வழங்கான்
பொலிவுறுகற்பளாவிப் போயன்றித்தனங்களீயா
ணலிவுறுலோபிசீவ னொழிவன்றியொன்றுநல்கான்.

(இ-ள்.) புலியானது தன்சீவன்போனா லொழியத் தோலைக்கொடாது சுத்தவீரனாயிருக்கிறவன் தன்சீவன்போனா லொழியப் புறங்கொடா

ன் பதிவிரதையானவள் தன்சீவன்போனு லொழியப் பிறத்தியாருக்கு ஸ்தனங்கொடாள் லோபியானவன் தன்சீவன்போனுலொழிய வொருவ னுக் கொருகாசுகொடான்.எ-று. (உஎ)

இன்னதற்ருல் இன்னதுநஷ்டமெனல்.

அன்னையேமரித்தால்வாய்க் குருசிநட்டமய்யன்ருனும்
பின்னையேமரித்தால்வித்தை பேணுதல்நட்டமன்றி
பன்னிடுதுணைவரற்ருல் சரீரத்திற்பாதிநட்டந்
தன்னுடபாரியற்ருல் சருவாங்கநட்டந்தானே.

(இ-ள்.) மாதாமரித்தால் வாய்க்குருசிநஷ்டம் பிதாமரித்தால் வித்தைநஷ்டம் சகோதரன்மரித்தால் சரீரத்திற்பாதிநஷ்டம் தன்னுடையபாரியாள்மரித்தால் சர்வாங்கமுநஷ்டம்.எ-று. (உஅ)

பெண்புத்திபிரளயநாசமெனல்.

எண்புத்திதனதுபுத்தி யியல்பதாமிலதேயாகில்
நண்புற்றமூத்தோர்புத்தி நண்ணியநலமுண்டாகும்
பண்பிலபலபேர்புத்தி நாசமாமதிலும்பார்க்கிற்
பெண்புத்திபதனைக்கேட்டாற் பிரளயநாசமன்றே.

(இ-ள்.) யாவனொருகாரியங்களை யாலோசனைபண்ணுமிடத்தில் தன்புத்தியினலே யாகிறது உத்தமம் அல்லது மூத்தோர்புத்தி கேட்கில் அதிகவுத்தமம் பலபேர்களுடைய புத்திகேட்கில் நாசம் பெண்புத்தி கேட்கில் வெகுபிரளயநாசமாம்.எ-று. (உகூ)

விஸ்வாசதுரோகம் மலையிலும்பெரிதெனல்.

உத்தபூமிக்குப்பார முவரியுமலைகளெட்டு
மெத்தவும்பாரமன்று மிகுந்தபாரங்கள்சொல்லிற்
கத்தணுக்கடுந்துரோகங் களக்கவேவிசுவாசித்து
வைத்தவர்க்கடுந்துரோக மகாபாரமாகுமன்றே.

(இ-ள்.) பூமிக்குச்சத்தசாகரமும் அஷ்டகுலபருவதமும்பாரமல்ல அதிலுமிகுந்தபாரங்கள்சொல்லவேணுமேயானல்கடவுள்காரியங்களுக்கிடைஞ்சல் தேடுகிறதேவெகுபாரம் அதிலுந்தன்னை நம்பினபேர்களுக்குவிசுவாச துரோகம்பண்ணுகிறது எல்லாத்திலுமதிகபாரமான பாவம்.எ-று. (௩0)

தனக்குத்தான்சத்துருவெனல்.

கடன்படுபிதாவுமெங்குங் கண்டவர்தங்கட்கெல்லா
முடன்படுமன்னைதானுமுயர்ந் திடுமரூபந்தானே
யடர்ந்திடும்பாரிவித்தையற் பியாசியாதபிள்ளை
தடந்கணுயிவர்கணுன்குஞ் சத்துருவாகுமன்றே

(இ-ள்.) கடன்படுகிற பிதாவும் பிறருக்கனுகூலியாயிருக்கிறமாதாவு ம்ரூபவதியான பெண்டிரும் வித்தை யப்பியாசம்பண்ணாத பிள்ளையுமி வர்கள்நாலுபேருந் தனக்குத்தானேசத்துருவாகும்.எ-று. (௩௧)

கல்லாதான்முருக்கம்பூவெனல்.

தேசிகமவ்வனங்கள்சிறந்த நற்கலன்கண்மிக்க
காசினியிரதஞ்சொர்னங் கரிபரிபடைத்தாரேனும்
நேசமாம்வித்தையற்று னிறைந்திடுமுருக்கம்பூபோல்
வாசனையிலாமனின்று வயங்கிடுமவாறுமன்றே.

(இ-ள்.) நல்லரூபவானுமாய் எவ்வர்னனுமாயிரத கஜதுரகபதாதி கள்படைத்தாலும் அவனிடத்திலே வித்தையில்லாதிருந்தால் வாசனை யில்லாதமுருக்கம் பூவோடொக்கும்-எ-று. (௩௨)

கல்விகற்றவன்கற்பகவிருட்சமெனல்.

வித்தையேயுளதால்மாதாபிதா வொடுபாரிவேண்டி
ஆற்றிடுஞ்சுகத்தைக்காட்டு முயர்திசையெங்குற்றுலு
மெத்தவும்புகழுண்டாகும் விரைமலர்த்திருக்கடாட்சம்
நித்தியமுண்டாங்கற்பவிருட்சம் போனிறைந்தவித்தை.

(இ-ள்.) இயாவனொருவனுக்குவித்தை யுண்டானல் மாதாபிதாபாரி இவர்கள்மூன்று பேருங்கொடுக்கிற சுகத்தைக்கொடுக்கும் அவர்களெ ங்கெங்கத்தேசஞ்சென்றுலு மவர்களுக்குலட் சுமிகடாட்சமுண்டு வித் தையானதுகற்பக விருட்சம்போலச் சகலசுகத்தையுங் கொடுக்கும்.()

தன்மத்துக்குநாசமில்லையெனல்.

ஏர்பெறுமர்ச்சுனர்க்கு மியம்புவானெவர்தூதன்
ஆரொனும்வாவிகூபதடாக முண்டாக்கியோர்நாள்
நீர்பெறச்செய்தாரேனு நிச்சயமிவர்கடானும்
பேர்பெறுகுலமூவேழும் பெறுகுவர்முத்திதானே.

(இ-ள்.) அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணதேவர்சொல்லுகிறார் அர்ச்சுனா ஆராகிலுங்கிணறு குளம்வாவிதடாகமுண்டாக்கி ஒருநாளாகிலும்சலம் நிற்கப்பண்ணினாராகிலவர்களுக்கொருக்காலு நரகமில்லை-எ-று. (௩௪)

பழுதையும்பாம்பென்றுணர்தல்.

உத்தமனிரவில்வேசியுறு மறுகருகேசென்றால்
மெத்தவுஞ்சமுசியங்கள் விளம்பிடுங்கதைநேராக
புத்துமாயிரவுமாகிப் பொருந்தியபழுதைமேலே
சுத்தியேகிடைக்கிலயந் தோன்றிடும்போலவாமே.

(இ-ள்.) உத்தமனயிருக்கிறவனி ராத்திரிகாலத்திலே வேசித்தெரு வீதியிலேசென்றால் சமுசியந்தோன்றும் அதன்போல் புத்துமாயிரவு மாகிப் பழுதையுஞ்சுத்தியிருந்தால் சமுசியந்தோன்றும்-எ-று. (௩௫)

இவர்கள்நரகத்தையடைவரெனல்.

சிறியவூரிருந்தான்றனுமற் பனைச்சேவிப்போனும்
பிறியமாய்ப்புலாலுண்பானும் பெருஞ்சினமனேவியோனும்
வறிஞராய்த்திரிவான்றனு மகவியைத்திரள்பெற்றனு
மறுவகைப்பெயரும்பூமி தனிநரகழுந்துவாரே.

(இ-ள்.) சிற்றூரிலேகுடியிருக்கிறவனும்அற்பனைச்சேவிக்கிறவனும் புலாலுடனேபோசனம் பண்ணுகிறவனுங் கோபமுடையஸ்திரீயையுடையவனும் பெண்களைத்திரளாய்ப் பெற்றவனுந் தரித்திரவானுமிந்தவறுவகைப்பெயரும் பூலோகத்திலேதானே நரகத்தையனுபவிப்பார்களெ-று

கன்னிகைரூபவானையிச்சிப்பளெனல்.

கன்னியையீயத்தந்தை கல்விமான்றனையேவேண்டுந்
தன்னியமீந்தவன்னே தனபதிதனையேவேண்டு
முன்னியசுற்றத்தார்நல் லுறவினைவேண்டுவார்கள்
மின்னியகன்னிரூபவானையே வேண்டிநிற்கும்.

(இ-ள்.) பெண்களைவாழ்க்கைப் படுத்துமிடத்தில் பிதாவானவன்வித்துவானுக்குக் கொடுக்கவாசைப்படுவன் மாதாவானவள் தனவானுக்குக்கொடுக்கவாசைப்படுவள் சுற்றத்தார்நல்லுறவினுக்குக் கொடுக்கவாசைப்படுவர்கள் அந்தக்கன்னியானவள் நல்லரூபாவனுக்கு ஆசைப்படுவாள்-எ-று. (௩௭)

ஸ்திரீகளுக்கு சுதந்தரமில்லையெனல்.

மங்கையைவாழுநாளில் வளமொடுபிதாவேகாப்பன்
பொங்கியயெவ்வனத்திற் பொருந்துபுத்தாவேகாப்பன்
தங்கியமூப்பிற்றங்கள் தனையரோகாக்குமன்றிச்
சங்கையாமொருகாலத்துஞ் சுதந்தரமில்லைதானே.

(இ-ள்) பெண்களைவாலிபத்தில் பிதாரட்சிப்பன் எவ்வனத்திலேபுருஷன்ரட்சிப்பன்மூப்பிலே பிள்ளைகள்ரட்சிப்பார்கள ஆகையாலே ஸ்திரீகளுக்கொருக்காலுஞ் சுதந்தரமில்லை-எ-று (௩௮)

வேண்டுமெனல்

தேவதைசபைபுராணஞ் செப்பிடுசபைகள்பூமி
காவலன்சபைகளாசான் வயித்தியன்கணிதன்றன்பாற்
போவதுகருமமாகிலெதுவெனும் பொருந்தக்கொண்டு
வீவதுகருமமென்றும் வெறுங்கரத்தெய்தலாகா

(இ-ள்) தெய்வசபைபுராணசபை ஆசாரியன்சபைவயித்தியன் சபை சோதிடஞ் சொல்லுகிறவர்களிடத்திற்சென்று காரியங்கொள்ளவேண்டிலேதாகிலும் பொருள்கொண்டுபோக வேண்டும் வெறுங்கையோடு போகலாகாது-எ-று (௩௯)

சேட்மூன்றறிதல்

அங்கியையவித்துப்பின்னு மவியாதசேடந்தானும்
தங்கியமாதனங்கள்கொடுத்துப் பின்றவிராச்சேடம்
பொங்கியநேராதம்மை செயித்துப்பின்போகச்சேட்
மங்கிடாச்சேட்மூன்றும் வர்த்திக்குமறிந்துகொள்ளே

(இ-ள்) அக்கினியையவித்தும் அவியாதசேட்முங் கடன்கொடுத்துங்கொடாதசேட்முஞ் சத்துருவைசெயித்துச் செயிக்காதசேட்மும் இந்தமூன்றுசேட்மும் மீளவிர்த்திக்கும்-எ-று. (௪௰)

அடுத்துக்காரியங்கொள்ள்வேணுமெனல்

ஆதிநாட்பகைஞர்தன்பாலருங் கருமங்கள்வேண்டில்
நீதியாஞ்சுத்தமாகநேய மாய்க்கொண்டுவுற்ற
சோதியாங்கருமமாகச் சேர்ந்தமுற்பகையைத்தானே
யேதினுற்றுட்ங்கலாமோ வப்படியிசைந்துகொள்வார்

(இ-ள்) ஆதிகாலமாகப் பகையாயிருக்கிறவனிடத்திற்சென்று காரியங்கொள்ளவேண்டில் அவனைசத்துருவாகக்கொண்டுகாரியமுடித்தவாறே பழையசத்துருவாகக் கொள்வார்-எ-று. (௪௧)

நாய்க்குப்பாலன்னமிட்டு தண்டிகையில்வைத்தாலும்

குலைக்கின்றகுணம்விடாதெனல்.

இணங்கிடாமூர்க்கருக்குளத்தனை விதஞ்சொன்னாலும்
வணங்கிதுற்குணம்விடார்கள் வளர்த்திடுஞ்சுணங்கனுக்கு
நிணங்கொள்பாலன்னமிட்டு நிறைந்தபொற்றுட்டும்போட்டு
மணங்கொள்தண்டிகையில் வைக்கில்குலைத்ததுகடிக்கும்வாறும்

(இ-ள்) துற்சனனானவனுக்கு யெத்தனை யிதஞ்சொன்னாலுந்தங்கள் துற்குணம்விடார்கள்அதென்போலவெனில் நாயானதுக்குநல்ல பாலுஞ்சோறும்போட்டு பொற்சங்கிலியும் கழுத்திலேபோட்டுக்கட்டிதண்டிகையில்வைத்துவளர்த்தாலுங் குலைத்துக்கடிக்குமாம் (௪௨)

எற்பதிகழ்ச்சியெனல்

இகலிருவர்க்குண்டாகிலிரு வரிலொருவரற்றால்
பகையறுமிருவர்கோபம் பணிந்திடிலொருவராறும்
மகவினைப்பெற்றவன்றே மடமின்னார்க்கிளமைபோகும்
புகன்றொருவன்பாற்சென்று யாசிக்கிற்பெருமைபோகும்

(இ-ள்) ஒருவனுக்கொருவர் பகைத்திருந்தால் இருவரிலொருவர் மடிந்தவாறே அந்தப்பகைதீரும் ஒருவருக்கொருவர் கோபித்திருந்தால் இருவரிலொருவர் பணிந்தவாறே கோபந்தீரும் பெண்களொரு பிள்ளைகளைப்பெற்றவாறே வழகு மிளமையும்போம் ஒருவனிடத்திற்போயாசித்தவாறே பெருமைபோகும்-எ-று (௪௩)

## விதியின்பயனறிதல்

அவரவர்தமக்குமுள்ள வாயிசுந்தொழிலும்பொன்னு
மிவர்களின்வித்தைசெல்வ மெழிலமரணங்களேழும்
தவமுடைப்பதுமவேதன் தானதைத்தொடங்கியென்றுஞ்
சிவனுடையருளினாலே கெற்பத்தினிச்சயிப்பான்

(இ-ள்) அவரவர்க்குள்ள ஆயிசும் தொழிலும் இலட்சுமிகட்ாட்சமும் வித்தையுஞ்செல்வமும் உருவமுமரண வேதனையுமாகிய வேழும்பிர்ம தேவனானவன் சிவகடாட்சத்தினாலே கெற்பத்தில்நிச்சயிப்பான் (௪௪)

## குணம்வேறுபாடெனல்

உற்றிடுங்குளத்தில்கொட்டியாம் பல்பங்கயங்களோடு
மற்றமச்சமுஞ்சனித்துவெவ்வேறு வனையாம்போலே
வுற்பனத்தொருத்திகெற் பத்துடன்பிறந்தார்களேனும்
விற்பனக்குணநிறங்கள் வேறுபட்டிருக்குமன்றே

(இ-ள்) ஒருகுளத்திலேகொட்டியும் ஆம்பலும்நெய்தலும் தாமரையுங்கூடிச்செனித்தாலுந் தன்குணமும்நிறமும் வேறுபட்டிருக்குமாப்போல ஒருகெற்பத்தில் பிறந்தபிள்ளைகளானாலும் அவரவர்குணமும் நிறமும்வேறுபட்டிருக்கும்-எ-று (௪௫)

## விதியையனுசரிக்குமெனல்

வண்டனுசரிக்கும்பூவைமலர் திருநயவான்றன்னைக்
கண்டனுசரிக்குநீர்தான் கனத்தபள்ளத்தைதேடிக்
கொண்டனுசரிக்குமென்றுங் குலவியவிதிதான்புத்தி
யுண்டுசென்றனுசரிக்கு மென்றறிவாளர்கொள்வார்.

(இ-ள்.) வண்டானது நல்லபுட்பத்தை அனுசரிக்கும் லட்சுமியான வள் நயமுள்ளவனை யனுசரிப்பாள் தண்ணீரானது பள்ளத்தையனுசரிக்கும் விதியானது புத்தியையனுசரிக்கும்-எ-று. (௪௬)

## மௌனம்கலகநாசனமெனல்.

சீர்பயிர்செய்வோர்க்கில்லை வறுமைகள்செபங்களானு
மேர்பெறச்செய்வோர்க்கில்லை பாதகமியல்பார்சோர்கும்
தேர்வுறுமவுனோர்க்கில்லை கலகமுந்தெளிந்திராவில்
பார்பெறச்சாக்கிறத்தை பண்ணினாற்பயமுமில்லை.

(இ-ள்.) பயிரிடுகிறவனுக்குத் தரித்திரமில்லை செபம்பண்ணுகிறவனுக்கு பாவமில்லை மவுனமாயிருக்கிறவனுக்கு கலகமில்லை இராத்திரி பகலசாக்கிறதையா யிருக்கிறவனுக்கு பயமில்லை-எ-று. (௪௭)

## நிமித்தியமன்றிகலகப்படுவரொனல்.

மறையவர்வேசிகோழி வயித்தியசுணங்கனைந்து
முறையுடன்றங்கள்சாதி கண்டிடின்முனிந்துசீறி

குறைபெறுகருமமின்றி நிட்கருமங்களாகி
நிறைவறசண்டைசெய்வ ரவரவர்குணங்கடானே.

(இ-ள்.) பிராமணரும் வேசியும் கோழியும் வயித்தியனுஞ் சுணங்கனு மிவர்கள் ஐந்துபேருந் தங்கள் சுயசாதியைக்கண்டவுடனே யொரு காரணமின்றி நிட்காரணமாகச் சண்டைப்படுவார்கள்-எ-று. (சஅ)

நிலைதவறினல் வருத்தநேரிடுமெனல்.

கேசமுமுகிரும்பல்லுங் கிளர்த்தியவேந்துந்தந்தம்
வாசமேயிழந்துபின்னு மறுத்துமோரிடங்கள்செல்லில்
நேசமேயழிந்துயாரு நிகட்சிசொல்லிடுவார்போல
பேசியமாந்தர்தங்கள் நிலைவிடிற்பெருமைபோகும்.

(இ-ள்.) மயிரும் நகமும் பல்லும் இராசாவும் தங்களிடம்விட்டு வேறிடஞ்சென்றால் தங்கள் பெருமை யழிந்து பிறராலிகழப் படுகின்றது போல் யாவருடைய நிலமைதப்பினலு மவர்களைக் காணக்குறைவாக விகழ்தலன்றி அபூச்சியத்தை யடையச்செய்வார்கள்-எ-று. (சகூ)

தன்மம்பண்ணுதவர்கள் பொருள்நாசமடையுமெனல்.

ஊனமேயெவருக்குஞ்செய் துறுபொருள்தேடிநல்ல
தானமுந்தவமுமன்றித் தான்பொசிப்பதுவுமன்றி
ஈனமாய்ப்புதைத்தோரத்த மெரிமன்னன்சோரான்றோய்
மானநால்வகைக்குமாகில் நசித்திடுமறிவுள்ளோரே.

(இ-ள்) யாதாமொருவன் கண்டபேருக்கெல்லா மிடுக்கம்பண்ணித் திரவியத்தைத்தேடி தானுண்ணுமலும் புதைத்துவைத்த திரவியமானது அக்கினியினலும் இராஜாவாலும் சோரனலும் தண்ணீராலும் இந்நாலுவகையாலும் நசித்துப்போகும்-எ-று (௫0)

கற்புடையமகளீர் ஒழுக்கமறிதல்

தாசிபோல்பணியில்புத்தி தன்னிலேயமைச்சுபோலும்
தேசினிற்றிருவுமூட்டுஞ் சினேகத்திலன்னைபோலும்
மாசிலாப்பொறைக்குப்பூமா தென்னவும்ருவுநாளில்
வேசிபோற்குணமிதாறு மிகுத்தகற்பினுக்குநன்றே

(இ-ள்) ஸ்ரீயானவள் வணக்கத்திலேவந்தால் அடியாளைப்போலவும் புத்தியிலேவந்தால் மந்திரியைப்போலவும் ரூபத்திலேவந்தால் லட்சுமியைப்போலவும் சரீரரட்சணையிலே வந்தால் மாதாவைப் போலவும் பொறுமையிலே வந்தால் பூமாதேவியைப்போலவுஞ் சயனத்திலேவந்தால் வேசியைப்போலவும் இந்த அறுவகை குணமுள்ளவள் பதிவிரதை-எ-று (௫க)

தலைவனேடெதிர்த்துரைத்துச் சிறுதனந்தேடித்தானும்
பலராலுகூலியாயும் பத்தர்புன்னசனஞ்செய்துங்

கலகமாயொருவர்பேச்சை யுரைத்துபோர்காணுவாரு
நலமிகுசேய்கள்பேற்றும் பெருகினும்விடுவர்நல்லோர்

(இ-ள்) பத்தாவுடனே யெதிர்த்து வார்த்தைசொல்லுகிறவளுஞ் சிறுதனந்தேடுகிறவளும் பலபுருடருக்கனுகூலியாயிருக்கிறவளும் பத்தாவுக்குமுன்னே யசனம்பண்ணுகிறவளு மொருவார்த்தையை யொருவருக்குச் சொல்லிக் கலகஞ்செய்கிறவளும் இவர்கள் அதிகமான பிள்ளைகள் பெற்றாலுங் கைவிடுவார்கள்-எ-று. (ரு௨)

கைத்தொண்டுசெய்பவர் பெரும்பயனறிதல்

உத்திடுமெண்ணெய்தானு முடுத்திடுமறையோர்க்கங்கம்
பத்தியேபிடிக்கப்பின்னும் பறித்தவருண்டவெச்சில்
நத்தியேயெடுக்கக்கோவை நயந்துதன்னுகிராற்கீற
நித்தியங்கோடியெக்கிய பலன்தருநிகழ்த்துங்காலே

(இ-ள்) பிராமணருக் கெண்ணெய்தேய்த்து அங்கவர்க்கதர்ச்சனைப்பண்ணலும் அவர்களுண்ட வெச்சிலெடுக்கவும் பசுவைத்தன்கையாற்சீநப்பசுவுக்குத் திரணங்கொடுக்க விவர்களுக்கு நித்தியங்கோடி யெக்கியம்பண்ணின பலன்றரும்-எ-று. (ருங)

இன்னார்செய்த பாவமின்னாரைச் சேருமெனல்

பூமியிற்சனஞ்செய்பாவம் பொருந்தியவேந்துக்காகும்
சேர்வினாலுற்றபாவம் புரோகிதற் கென்றுகூறும்
பாவகவில்லாளபாவம் பத்தாவுக்காகுமென்றும்
ஏவல்செய்சீஷன்பாவங் குருவினுக்காகுமன்றே

(இ-ள்) பூமியிற்சனங்கள் பண்ணினபாவம் இராசாவுக்காகும் இராசாசெய்தபாவம் புரோகிதர்க்காகும் ஸ்திரீசெய்தபாவம் புருஷர்க்காகும் சீஷின்செய்தபாவம் குருவுக்காகும்-எ-று (ருச)

பிராமணர்களை அரசன்காக்காவிடில் உலகம்நாசமடையுமெனல்

வேந்தொருதருவுஞ்சாகை மிகுத்தமந்திரியும்பூமி
போந்திடுமிலையின்மூலம் பூசுரர்க்காகுமாதல்
வாய்ந்திடுமறையோர்தம்மை மன்னவன்காப்பனல்லால்
சேர்ந்திடுமூலத்தோடு நாசமாந்திண்ணந்தானே

(இ-ள்) இராசனொருவிருட்சமும் மந்திரி யொருசாகையும் பூமியொருயிலையும் பிராமணர் மூலமானபடியினாலே இராசாவானவன் பிராமணரைக் காக்கவேணும் இல்லாதிருந்தால் மூலத்தோடும் நாசமாம்-எ-று. (ருரு)

பிராமணர்களைத்தெய்வமென்றுணர்தல்

சகமெலாந்தெய்வர்தீனந் தெய்வமந்திரத்தாதீன
மகம்பெறுமந்திரந்தான் மறையவர்தன்னுதீனம்

இக்பரமிரண்டுந்தானு மியைந்திடுமறையோர்தானே
அகம்பெறுமிந்தநாலா லவர்களேதெய்வமாமே.

(இ-ள்.) செகமெலாந்தெய்வத்தினுடைய ஆதீனந்தெய்வம்மந்திரத்தினுடைய ஆதீனம் மந்திரம் பிராமணருடைய ஆதீனம் ஆகையாலே பிராமணரே தெய்வமாம்-எ-று, (௫௬)

துர்ச்சனன்வசிக்குமூரைவிட்டுவிலகவேண்டுமெனல்,

வண்டிற்குமுழமைந்தாகும்வாசிக்குமதுவேபத்தாங்
கண்டுற்றகரிக்குத்தானுமாயிரமுழங்காணெனப
வண்டுற்றகுழலாளிந்தவையகந்தன்னின்மீது
மிண்டுற்றதுர்ச்சனன்றானிருக்குமூர்விட்டுப்போமே.

(இ-ள்.) வண்டியைக்கண்டால் ஐந்துமுழம்வில்கவேணும் குதிரையைக்கண்டால் பத்துமுழம்விலகவேணும் யானையைக்கண்டால்ஆயிரமுழம் விலகவேணும் துர்ச்சனனைக்கண்டால் அவனிருந்தவூரைவிட்டே ஓடிப்போகவேணும்-எ-று. (௫௭)

தன்மத்துக்குவிகாதம்செய்தவர் அகோரநரகில்

அடைவரெனல்.

தீர்க்கமாயொருவர்தன்மஞ்செய்யவேசிந்தித்தேத்துஞ்
சேர்க்குநாளதற்கிடுக்கண்செய்யவேதுணிந்துதானும்
வாக்கினாற்சட்டத்தாலன்றிமனதினால்வடுக்கள்செய்து
ஆக்கிடாவகைசெய்தார்களகோரமாநரகில்வீழ்வார்.

(இ-ள்.)யாதாமொருவன் ஒருகாரியத்தைச்செய்ய வேணுமென்றும் னதிலே உத்தியோசிக்குமிடத்தில் அதைவாக்கினாலுஞ்சட்டத்தினாலும் விகாதம்பண்ணியந்தத் தன்மத்தை விலக்கினானாகில்அவன்அகோரமானநரகத்திலே விழுவான்-எ-று. (௫௮)

நீசனானாலுந்தன்மஞ்செய்வானாகில்

பதவியையடைவனெனல்.

பாயிருஞாலந்தன்னிற்றன்மத்தின்கருமம்வந்தால்
நேயமாஞ்சட்டத்தால்வாக்காலநிதியினாலெதுவேயேனும்
மீதலாற்சகாயஞ்செய்தாலெண்ணிருநீசரேனும்
ஆயிரங்கோடிகாலம்அமருலகாள்வரன்றே.

(இ-ள்.)பூலோகத்திலே யாதாமொருதன்மகாரியம்வந்தபோதுசரீரசகாயம் வாக்குசகாயம் அர்த்தசகாயஞ்செய்து அந்தத்தன்மத்தை நிறைவேற்றினானாகில் அவன்நீசனானாலும் ஆயிரங்கோடிகாலம்தேவலோகத்தையாள்வான்-எ-று, (௫௯)

### இன்னதனுல்இன்னதழியுமெனல்.

மின்னமைவிபசாரத்துமிகுத்திடுந்தவத்திலநன்மை
மன்னியகோபத்தாலுமற்றநீருவட்டினுலும்
பன்னிடுமறையோர்நன்மைபரர்மின்னுர்சேர்தலாலு
மன்னவன்அநீதத்தாலுமழிந்திடுநன்மைதானே.

(இ-ள்.)ஸ்திரீகளுடையநன்மைவியபசாரத்தினுலேயழியும்தபசிகளுடையநன்மைகோபத்தினுலேயழியும் சலத்தினுடைய நன்மையுவரினுலேயழியும் பிராமணுளுடையநன்மை ஸ்திரீபரபோகத்தினுலேயழியும இராசனுடையநன்மை அநீதத்தாலும் அழியும்-எ-று. (சுய)

### இதனுல்இன்னதுநலமெனல்.

தூசுறுநீர்க்குச்சிதந்துலங்கியதோழனுக்கு
நேசம்வஞ்சனையிலாமைநேரிழைகுணமேயாகும்
பேசிடும்பேச்சில்நன்மை பெருகுமாதரவுதானே
போசனந்தனக்கிதெல்லாம் பொருந்துரோசங்களாமே.

(இ-ள்.) சலத்துக்குரசங் குளுமை தோழனுக்குரசம் வஞ்சனையிலாமைஸ்திரீகளுக்குரசங்குணம்விசேஷத்துக்குசுரசமிங்கிதமானவார்த்தை போசனத்துக்குரசம் அன்புடனே யன்னமிடுகை-எ-று. (சுக)

### இன்னதனுல் இன்னதுதுன்மைப்படுமெனல்.

ஆசனமெண்ணெயோடே போசனமிவைகள்மூன்றும்
மாசுறத்தன்கையாலே வழங்கியேகொண்டாளுகில்
பேசிடுமாயுள்நாசம் பெருத்திடுமைந்தர்நாசம்
தேசுறுமலராள்தானு மிருந்திடாள்செப்புங்காலே.

(இ-ள்.) தன்கையினுலே ஆசனம்போட்டுக்கொண்டால் ஆயிசுநாசம், தன்கையினுலேயெண்ணெய் தேய்த்துக்கொண்டால் புத்திரநாசம் தன்கையினுலே ஆபோசனம்வார்த்துக்கொண்டால் ஐசுவரியநாசமாம்

### விதிவசத்தைவெல்லக்கூடாதெனல்.

மதகரிபாம்புபுள்ளுமனித ராற்கட்டுண்டெய்து
மிதமுளமதியும்பானும் இராகுபாலிடையூறுற்று
சிதமுளபுத்திமானைத் தரித்திரஞ்சேர்தலாலும்
விதிவசமொருவராலும் வெல்லுவதரிதாமன்றே.

(இ-ள்.) மதயானைகள்பாம்புகள் பட்சிகள் மிருகங்கள் இவைமனிதர்கையிலே கட்டுப்படுகின்றதுஞ் சந்திரசூரியாள் இராகுகேதுவினுலேபிடிபடுகிறதும் புத்திமானுகவிருக்கிறவன் தரித்திரத்திலடிபடுகிறதும் இவையெல்லாம் விதிவசமாகையினுலே விதிவசத்தைவெல்லக்கூடாது-எ-று. (சுஉ)

உற்பாதவேலைசெய்பவன் இடுக்கமடைவனெனல்.

புத்தியில்மிகுத்தவானற்போதவே யிருந்தானாகில்
மெத்தவுமலட னதலல்லது மிடியனதல
உற்றிடுங்கருமமூன்றுமுள்ள தாயுளாக்குங்காலே
பெற்றவற்பாயிசாகிப்பெருக்கவே யுண்டாமென்றே.

(இ-ள்.) யாதாமொருவன்புத்தியிலே உற்பாதபுத்தியா யிருந்தானாகில் அவன்மலட னகுதல் மிடியனகுதல் அற்பாயிசுவாகுதல் இத்தமூன்றுகாரியத்திலே யொருகாரியந்தவறாது-ஏ-று. (௫௪)

லவுத்துவஞ்சேரும்வகையறிதல்.

வாலையோடிணக்கமன்றி மரிப்பன்றிச்சிரித்தல்மின்பால்
சாலவேசண்டையென்றுந் தறுகணுள்ளரைச்சேவித்தல்
கோலியேகழுதையேறல் கூத்தியார்பாலில்வார்த்தை
சிலமாயுரைக்கில்தானும் லவுத்துவஞ்சேருமன்றே.

(இ-ள்.) சிறுபிள்ளைகளுடனே யிணக்கமும் காரியமில்லாமல் அவலமாகநகைக்கிறதும் ஸ்திரீகளுடன் சண்டைப்படுகிறதும்துன்மார்க்கரைச்சேவிக்கிறதும் கழுதைமேல் சாரிசெய்கிறதும் தேவடியாளிடத்திலே ஆசைவார்த்தைசொல்லுகிறதும் இவையெல்லாந் தனக்குலவுத்துவஞ்சேரும்-ஏ-று. (௫௫)

பாம்பின்கீழ்எலிவசிக்கிற குணமிவையெனல்.

அடுத்தங்கேதனைச்சேவிப்போரவர்கள் மேற்குறைகள்நித்தந்
தொடுத்தங்கேதினம்பாராட்டித் தொல்வழக்கிடுவோர்தங்கள்
இடத்தினிலிருந்துவுண்டியியற்றுத லெல்லாம்பாம்பின்
படத்தின்கிழெலியின் வாழ்க்கைபண்ணுதல்போலாமன்றே.

(இ-ள்.) தினந்தினங்குற்றந்தேடுகிற வனிடத்திலே சேவிக்கிறதுஎப்படியென்றால் எலியானது பாம்பின்படத்தின்கீழே குடிவாழ்க்கைபண்ணுதல்போலாம்-ஏ-று. (௫௬)

தரித்திரனுக்குஅளவில்லாதசிந்தையெனல்.

வேந்தருக்காசிற்சிந்தை மிகுத்தகாமுகருக்கெல்லாம்
போந்திடுகாமச்சிந்தை பொருந்துயோகிக்குமுத்தி
வாய்ந்திடுவழிமேல்சிந்தை வறிஞருக்களவிலாத
நீந்தொணுச்சிந்தையென்று நீணிலத்தியங்குந்தானே.

(இ-ள்.) இராசாவுக்கு இராச்சியத்தின்பேரிற்சிந்தை எவ்வர்ணஸ்திரீகளுக்கு காமத்தின்பேரிற் சிந்தை யோகியர்களுக்கு மோட்சத்தின்பேரிற்சிந்தை தரித்திரவானுக்கு அளவில்லாதசிந்தை-ஏறு. (௫௭)

சுகமறிதல்.

கூபநீராலநீழல்குலவியபாவடக்கு
சாபமாம்புருவமாதர்தனங்கள்தானிவைகள்பானு

பன்னும்பின்படியாராய்ந்து பாங்குட னிவர்கள் தங்கள்
நன்மாதாச்சமானமென்று நல்லறிவாளர்கொள்வார்

(இ-ள்) தன்னுடையமாதா குருவினுடையதேவி தன்தமையன்தேவி இராஜாவின்தேவி மாமியார் இந்தஐந்துபேருந் தனக்குத்தாயென்று சொல்லப்படும்-எ-று (எசு)

பிதாக்கள்விவரமறிதல்.

தன்னையேயீன்றோன் வித்தைசாத்தினோனுபதேசங்கள்
பன்னினோனொளித்துவந்தோன்பயந்தவிர்த்திடுவோன் பஞ்ச
முன்னியேவந்தகாலத்துகந்தன்னங்கொடுப்போனைந்தும்
நன்மையாம்பிதாவாமென்று நல்லறிவாளர்கொள்வார்

(இ-ள்.) தன்னைப்பயின்றவனும் வித்தையப்பியாசம் பண்ணிவைத்தவனும் உபதேசம்பண்ணினகுருவும் பயந்தொளித்துவந்தவனைப்பயப்படாதேயென்றுசொன்னவனும் பஞ்சகாலத்திலே அன்னங்கொடுத்தவனும் இந்தஐந்துபேரும் பிதாவென்றுசொல்லப்படும்.

தாதாவென்றுகீர்த்திபெற்றவன்லட்சத்தி
லொருவனெனல்

சகத்திலேயொருவன்சூரன்சாற்றியவாயிரத்தி
லிதத்துடன்வித்துவானுமெண்பதினாயிரத்தில்
விதத்துடன்சபையில்வார்த்தைவிளம்புவான் லட்சத்தொன்றிற்
பதத்துளதாதாவுண்டோ வில்லையோபகருங்காலே

(இ-ள்) நூறுபேரிலேஒருவன் சூரனாயிருப்பன் ஆயிரம்பேரில் ஒருவன்வித்துவானாயிருப்பன் பதினாயிரம்பேரில் ஒருவன்சபையில்வார்த்தைசொல்ல வல்லவனாயிருப்பன் இலட்சம்பேரில் ஒருவன்தாதா உண்டோயில்லையோ தெரியாது-எ-று (எஅ)

நெய்யுள்ளவரையில் தீபமெரியுமெனல்

தளிகையிநெய்யைவார்த்துத் தானெடுத்திடுந்திபத்தி
லெளிசெனவதனிற்றீபமேற்றினால தற்குன்றில்லை
களினமின்னுள்ளமட்டுஞ்சிலவினாற் சேதமாமோ
தெளிதிருவற்றாலெண்ணெ யெய்திடாத்தீபமாமே

(இ-ள்) விளக்குநிறைய நெய்யைவிட்டுத்திரியும் போட்டுஎரிகிறதீபத்தில் அநேகந்தீபம் ஏற்றினாலும் திரியும்நெய்யுமுள்ளமட்டும் அதற்குத்தாழ்வில்லை அதென்போலவெனில் இலட்சுமிகடாட்சமுள்ளமட்டும்செலவிட்டதினால் சேதமுண்டோ இலட்சுமிகடாட்சந் தப்பினால் எண்ணெயில்லாமல் தீபம்துலங்காது.எ-று. (எகூ)

குழந்தைகளுக்கு அழுகைசலுகையெனல்

புள்ளுக்குபெலமாகாயம் பொருந்துமீன்றனக்குநீராம்
எள்ளுற்றபேதைக்குத்தானிறைவனே பெலமதாகுந்

தெள்ளுற்றசிறியோர்க்கென்று மாற்றுகைபெலமதர்குங்
கள்ளுற்றகுழலாய்நாலும் பெலமெனக்கண்டுகொள்ளே

(இ-ள்) பட்சிகளுக்குபெலம் ஆகாயம் மச்சங்களுக்கு பெலம்சலம் ஸ்திரீகளுக்குபெலம் தன்புருஷன் சிறுபிள்ளைகளுக்கு பெலம்அழுகை-எ-று (அய)

வேம்புக்குக்கசப்பும்மருவுக்குவாசனையும் தனக்குத்தானே உற்பத்தியெனல்.

நற்குணந்துற்குணங்கள் மனிதர்க்குமிடையில்நன்றுஞ்
சற்குணத்துற்குணங்கள் சடமெடுப்பளவேயுண்டாம்
பற்கசப்புறவேம்புக்கும் பகர்மணமருவினுக்கும்
உற்பனகாலந்தன்னி லுதித்திடும்போலவாமே.

(இ-ள்) மனுஷருக்குநல்லகுணமும் பொல்லாதகுணமுஞ் சரீரமெடுக்கச்சேதானே உண்டாகிறதல்லாமல் இடைநடுவே வரமாட்டாது அதென்போலவெனில் வேம்புக்குக் கசப்பும் மருவுக்குவாஸனையுசம் பிறக்கச்சேதானே கூடப்பிறக்குமாப்போல.எ-று. (அக)

இவர்களிடத்தில் லட்சுமியிராதெனல்

அழுக்குப்பல்லழுக்குத்தூசு அதிகபோசனந்தானென்று
மொழுக்கத்துநிட்டூரங்க ளுரைப்பவனுதயகாலம்
பழுதற்றசாயுங்காலத்துயில் பவன்றன்னைப்பார்த்து
இழுக்குற்றுமலராமாலோடாகிலு மிராள்நானென்றே

(இ-ள்) அழுக்குப்பல்லோடிருக்கிறவன் அழுக்குப்புடவையோடிருக்கிறவன் அதிகபோசனம்பண்ணுகிறவன் என்னேரமும்நிட்டூர வார்த்தைசொல்லுகிறவன் உதயகாலம் சாயங்காலம் நித்திரைபண்ணுகிறவன் இவர்களிடத்தில் இலட்சுமியிராள்-எ-று (அஉ)

இன்னதுபுசிப்பவரிடங்களில் பக்தியிராதெனல்

அத்திக்காய்கோவைதேத்தான் விரலிக்காய்வெள்ளைக்
கத்திரிசோற்றுக்காந்தல் கண்டிதையாவரேனும்
நத்தியேயுண்பார்க்கெல்லா நாரணன்றுளின்மீது
பத்திதான்வாராதென்றும் பரமனாருளினாரே.

(இ-ள்) அத்திக்காய்கோவைக்காய் தேத்தான்காய் ஐவிரலிக்காய் வெள்ளைக்கத்திரிக்காய் சோற்றுக்காந்தல் இவைகள் பொசிக்கிறபேர்களுக்குதெய்வபத்திவாராது-எ-று (அங)

இவைகளுக்குஎச்சிலில்லையெனல்

மதலைநீரிடுமிடங்கண் மகிழ்ச்சியாயிரவில்மின்னார்
அதரபானங்கள்வேட்டையாடிய நாய்கள்கவ்வி
யுதவியமிருகந்தானுமுணர்ந்த தோர்கிளிகள்கோது
மிதமுளகனிக்குமென்று மெச்சிட்டமில்லைதானே

(இ-ள்) குழந்தைகள் நீரிடுமிடத்தும் ஸ்திரீகளுடைய அதரபானத்துக்கும் வேட்டைநாய்கடித்த மாங்கிஷத்துக்கும் கிளிகள்கோதிய பழத்துக்கும் இவைகளுக்கெல்லாம் எச்சிலில்லை-எ-று (அச)

உற்றபர்க்கிலேயுமென்று மிடைவிடாதோடுநீரும்
நற்றியேகருப்புக்கட்டி பாலொடுதானுநன்றாய்ச்
சொற்பயில்தோகையோடுஞ் சுராபானம்பிசிதமெல்லா
முற்றமேபார்க்குநாளி லுச்சிட்டிமில்லேத்தானே

(இ-ள்) பாக்குவெற்றிலைக்கும் இடைவிடாமல் பெருகிவருகிற சலத்துக்கும் கருப்புக்கட்டிக்கும் பாலுக்கும் தேனுக்கும் ஸ்திரீகளுடைய அதரபானத்துக்கும எச்சிலில்லை-எ-று (அரு)

ஒருகையினால் ஏற்பதில் கொடுக்கிறவர்கள் அடையும்பலனறிதல்

பாக்குவெற்றிலையுங்கந்தம் பரிமளமலருந்தூசுஞ்
சேர்க்குமாபரணமெல்லாஞ் சிறந்தொருகரத்தால்வாங்கித்
தூக்கியேர்த்திடுவார்க்கென்றுந் துலங்கியேசீர்நாடோறுந்
தாக்கிடுமாயிசுண்டாய்த் தானும்வீற்றிருப்பனன்றே

(இ-ள்) பாக்குவெற்றிலையுங் கெந்தகஸ்தூரி பரிமளசுகந்தாதிகளும் ஆபரணங்களும ஒருகையினாலே வாங்கினால் கொடுக்கிறவனுக்கு ஐசுவரியமும் கீர்த்தியும் அடைந்திருப்பான்-எ-று (அசு)

இன்னவைகள்சேர்ந்தால் இன்னவைகள்விடுவனெனல்

வாசிவந்துற்றால்கோவை மறந்துகைவிடுவர்நல்ல
வேசிவந்துற்றால்பாரி தன்னையேவேண்டானென்றுந்
தூசுசாத்திரங்கள்வந்தால் மறைதொகுத்தேதான்வேண்டிற்
றேசிதன்மருகன்வந்தான் சேயினைமறப்பர்ளென்றே

(இ-ள்) குதிரைகைவசமாய்வந்தால் பசுவைரட்சிப்பதை விடுவன் தாசிவந்தால் பெண்சாதிகைவிடுவன் சாஸ்திரம்வந்தால் வேகத்தைக்கை விடுவன் மாப்பிள்ளைவந்தால் மகளைக்கைவிடுவள்-எ-று (அஎ)

வைகுந்தத்தையும் கயிலாசத்தையும் வேட்டகத்துக்கு

சமன்கூறல்

சீர்பெறுமவர்க்குமற்றச் சிறுமையோர்தமக்குவேட்ட
வ சகமினிதாமென்போல்பொருந்திடும்பிறந்தயில்லம்
பார்பெறக்கட லில்மாலும்பள்ளிகொண்டிருந்தானீசன
வர்பெறமுடையாலில்லங்கிரியின்மேலிருந்தானென்றே,

(இ-ள,) அயிஸ்வரியவானுக்கும் தரித்திரவானுக்கும் வேட்டகத்திலேயிச்சையாயிருக்கும் அதென்போலவென்னில் மகாலட்சுமிக்குப்பிறந்தகமான திருப்பாற்கடலிலே மகாவிஷ்ணுபள்ளிகொண்டார் ஈஸ்வ

ரிக்குப்பிறந் த்கமானமலையிலே வெள்ளியங்கிரியில் ஈஸ்வரன் எழுந்த ருளினர்-எ-று. (அஅ

## ஸ்திரீகள் சதுர்யுகத்திலும்யமனுகுவரெனல்.

முந்தின்யுக்த்தில்ரேணு முதிர்திரேதாயுகத்தில்
வந்திடுஞ்சீதைபின்னும் வளர்துவாபரயுகத்தில்
சுந்தரஞ்சேருமந்த துரோபதைமூன்றுங்கூத்தாம்
அந்தமில்கலியுத்தில் அகத்தொருகூற்றுமன்றே.

(இ-ள்.) கிரேதாயுகத்திலே ரேணுகாதேவி கூற்றுவனுகவிருந்தாள் திரேதாயுகத்திலே சீதாதேவிகூற்றுவனுக விருநதாள் துவாபரயுகத்திலே துரௌபதை கூற்றுவனுகவிருந்தாள் ஆகையினுலே மூன்றுயுகத்துக்கும் கலியுகத்துக்கும் தந்தன்மனைவிகள் கூற்றுவனுகவிருந்துஅழிப்பார்கள்-எ-று. (அகூ)

## பிரதியுபகாரம்பெருதார் விவரமறிதல்,

நதிபலாவானமூன்று நலந்தருமுபகாரங்கள்
நிதமுட்ன்செய்வதல்லால் தாமுபகாரமேற்கார்
மதிபெறுநல்லோர்தாமும் வழங்கிடுமுபகாரத்துக்
கெதிருபகாரங்கொள்ளா ரவனியிலியற்றுங்காலே.

(இ-ள்.) ஆறுகள்பெருகினுலும் விருட்சங்கள்பழுத்தாலும் மேகங்கள்வருஷித்தாலும் லோகத்துக்குபகாரஞ் செய்கிறதேயல்லாமல் தாங்கள்பிரதியுபகாரங்கொள்ளார்கள்-எ-று. (கூ0)

## புகைநுழையாயிடத்தில் தரித்திரநுழையுமெனல்,

நீர்நுழையாவிட்த்தில் நெய்புகும்நெய்கழன்று
மோர்நுழையாவிட்த்திற் பால்புகும்பாலோடன்றும்
பேர்நுழையாவிட்த்திற் புகைபுகும்புகைபேறென்றுஞ்
சீர்நுழையாவிட்த்திற் றரித்திரனுழைவானன்றே,

(இ-ள்.) நீர்நுழையாவிட்த்தில் நெய்நுழையும் நெய்நுழையாவிட்த்தில்பால்நுழையும் பால்நுழையாவிட்த்தில்புகைநுழையும் புகைநுழையாவிட்த்தில் தரித்திரவானுழைவான்-எ-று. (கூக)

## இன்[illegible]வையால்நஷ்ட்மடைவர்களெனல்.

பெத்ததில்மகிழ்ச்சிகொள்ளாப்பிராமண னெதுபெற்றாலும்
வைத்ததுமகிழ்ச்சிகொண்ட மன்னனும்பயந்திலச்சை
யுத்ததுவிருக்குமந்தவேசியு முயர்ந்தநாணம்
பத்தற்றகுலத்துமாது நஷ்டமாம்பகருங்காலே,

(இ-ள்) பெற்றதிலேபிரியப்பட்ாதபிராமணனும் பெற்றதிலேபிரியப்படுகிறராஜாவும் லச்சையுண்டாயிருக்கிறவேசியும் லச்சையில்லாதகுல

ஸ்திரீயும்இவர்கள்நாலுபேரும் நஷ்டத்தையடைவார்கள்-எ-று. (௬௨)

## இன்னதினால் இன்னதில்லையெனல்.

சொற்பயிர்செய்வோர்க்கில்லை தாழ்வுகள்செபங்களென்று
முற்பிறச்செய்தோர்க்கில்லை பாதகமியபபாசஞ்
சொற்பொருமவுனேர்க்கில்லை கலாபமுந்தெரிந்திராவிற்
பற்பெருஞ்சாக்கிருதை பண்ணினற்பயமுமில்லை.

(இ-ள்.) கிருஷிபண்ணுகிறவனுக்குப் பஞ்சமில்லை செபம்பண்ணுகிறவனுக்குப் பாதகமில்லையமதண்டனையில்லை மவுனமாயிருக்கிறவனுக்குக்கலாபமில்லை இராத்திரிகாலத்திலே ஜாக்கிரதையாயிருக்கிறவனுக்குப்பயமில்லை-எ-று. (௬௩)

## இன்னவை விஷமென்றறிதல்.

பருவங்களற்றா ள்நூல் பண்ணலும்பசியில்லாத
தரணங்கள்தன்னிலன்னம் பொசித்தலுந்தரித்திரற்கே
கிரணங்களொத்தமின்னாள் கோஷ்டியும்விருத்தனுக்கு
பொருமந்தவேற்கண்ணாள்தன் போகமும்விட்மாய்த்தோன்றும்.

(இ-ள்.) வித்தையப்பியாசம் பண்ணுகிறகாலந்தப்பிவித்தைபடிக்கிறதும்அசீரணத்தின்பேரிலே போசனம்பண்ணுகிறதுந்தரித்திரனுக்கு அழகியஸ்திரீகளுடைய கோஷ்டியும்விருத்தனுக்குவாலைஸ்திரீகளுடையகோஷ்டியும் இந்தநாலுகாரியமும்விஷமாகும்-எ-று. (௬௪)

## துர்ச்சனன்சத்தியத்துக்குட்பட்டானெனல்.

அரவுதுர்ச்சனரிற்றீயோ ராரொனில்கடுத்தனென்னைப்
பரவுதுர்ச்சனனேதீயோன் பாம்புமந்திரத்தால்நிற்கும்
திரள்மணியதனாலிற்குஞ் சேர்ந்ததுர்ச்சனன்ருனென்றும்
ஒருவர்யோசனையுங்கேளா னவன்கொடியோனென்ருேதும்,

(இ-ள்) சற்பத்திலுங்கொடிய விஷமுடையவன் துர்ச்சனனேயாகும் அதென்போலவென்னிற் பாம்பானதுமணிமந்திர அவிழ்தங்களினாலே கட்டுப்படும்துர்ச்சனனாயிருக்கிறவன்எத்தனைவிதங்கள்சொன்னாலுந்தன்னுடையபுத்தியைவிடமாட்டான்-எ-று. (௬௫)

## துர்ச்சனனுக்குநற்போதனைசெயில்தன்புத்திவி[illegible]ானெனல்.

கண்ணுருகற்பூரத்தால் புழுகுகஸ்தூரியாலே
பண்ணியேசேறுசெய்து உள்ளியைப்பத்துப்பன்னீர்த்
தண்ணியாற்பயிர்செய்தாலுந் தன்னாற்றநீங்காப்போல
நண்ணியெத்தனைசெய்தாலுந் துர்ச்சனனலத்தனாகான்.

(இ-ள்.) நல்லகளபகஸ்தூரி கற்பூரத்தினாலே சேறுசெய்துநடுவேஉள்ளியைவசம்பைகட்டுப் பன்னீர்வார்த்துப் பயிர்செய்தாலும்உள்ளியானதற்குதன்னுடைய நாற்றம்போகாது அப்படிபோலேதுற்சனனுக்கெ

த்தனைநலங்களைச்சொன்னாலும் அவனுக்குநல்லபுத்திவரமாட்டாது.()

பிள்ளைகளைத்துதிக்கலாகாதெனல்.

குருவினைத்துதிக்குமுன்னே கூடியசபையினன்றி
அருளுவோன்றோழன்றன்னைத் துதித்திடவடியார்தன்னை
பரவியகருமமாக வேண்டிடில்துதிக்கப்பாரி
உருமடிந்திடில்துதிக்க மகவினைத்துதிக்கொணாதே.

(இ-ள்.) குருவைக்கண்டவுடன் துதிக்கவேணும் நன்றிசெய்தவனை யுந் தோழனையுஞ் சபையில் துதிக்கவேணும் தாசி தாசாளைக்காரியங் கொள்ளவேணும்போது துதிக்கவேணும் பாரியானவளை உருமடிந்தபி றகு துதிக்கவேணும்பிள்ளைகளை ஒருக்காலுந்துதிக்கக்கூடாது.எ-று()

இவர்கள்முகத்தில் விழிக்கலாகாதெனல்.

தாவுபட்சியில்சண்டாளி சாத்தியகாக்கைநாற்கால்
மேவியமிருகந்தன்னில் கழுதைசண்டாளியென்னும்
யாவதுகருமம்யோகியவரில்சண்டாளிகோபி
பூவில்வாழ்மாந்தர்தன்னிற் பொருந்துதூஷணசண்டாளி.

(இ-ள்.) பறக்கிறபட்சியிலே காக்கைசண்டாளி நாற்கால்மிருகத்தி ல்கழுதைசண்டாளி ருஷிகளிலே கோபமுடையவன் சண்டாளிமனித ரிலேதூஷிக்கிறவன் சருவசண்டாளி ஆதலாள்இவர்கள் முகத்திலேவி ழிக்கலாகாது-எ-று. (கூஅ)

நற்குலபுத்திரன் ஆசாரமடைவனெனல்.

கார்தனைக்கண்டமஞ்ஞை கதித்தெழுந்தாடல்போலு
மோர்பெறுமதியைக்கண்டா லாம்பலுமிதங்கல்போலுந்
தார்குறுவசந்தகாலந் தழைத்திடுமடவிபோலுஞ்
சீர்பெறுகுலத்தில்வாழுஞ் செல்வர்க்காசாரஞ்சேரும்.

(இ-ள்.) மேகத்தைக்கண்டமயில்கள் கூத்தாடுதல்போலுஞ் சந்திர னைக்கண்ட ஆம்பல் மலருகிறதுபோலும் வசந்தகாலத்தில் விருட்சங் கள் தழைக்கிறதுபோலும் நல்லகுலத்திற்பிறந்த பிள்ளைக்கு ஆசாரமு ஞ்சுத்தமுஞ்சேரும்-எ-று. (கூகூ)

பிரமஹத்திசேரும்வகையறிதல்.

சோதிடஞ்சொல்லுவோனுந் தொல்வழக்குரைப்போன்றானும்
பேதமாய்வெற்றுக்கேனும் பிராய்ச்சித்தம்விதிக்கின்றோனும்
பேதமாய்வயித்தியங்க ளியற்றுவோனிவர்களாலின்
சோதனைதப்பிச்செய்தால் பிரமத்திதோஷஞ்சொல்லும்.

(இ-ள்.) சோதிடஞ்சொல்லுகிறவனும் வழக்குத்தீர்க்கிறவனும் யா தொருகாரணமின்றி பிராச்சித்தம் பண்ணுகிறவனும் வயித்தியம்ப ண்ணுகிறவனும் இவர்கள்நாலுபேரும் சாஸ்திரப்படிக்குச்செய்யாவி ட்டால்பிரமகத்திதொடரும்-எ-று. (ய)

நீதிசாரமூலமும் உரையும் முற்றிற்று.